**செய்தி வெளியீடு எண் : 666** **நாள்: 07.11.2012**

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு V.மூர்த்தி அவர்கள் மற்றும் ஆவின் அதிகாரிகள் அடங்கிய குழு கடந்த ஆகஸ்டு மாதம் பெல்ஜியம் நாட்டில் அமைந்துள்ள கெண்ட் பல்கலைக்கழகத்திற்கு சென்று அங்கு பால் உப பொருட்கள் மற்றும் சாக்லெட் தயார் செய்யும் தொழில் நுட்பம் மற்றும் அந்நாட்டில் இயங்கி வரும் கூட்டுறவு பால் பண்ணைகளின் செயல்பாடுகள், தொழில் நுட்பங்களைப் பார்வையிட்டனர்.

இதன் தொடர்ச்சியாக பெல்ஜியம் கெண்ட் பல்கலைக்கழகத்திலிருந்து டாக்டர் கோன் டிவிட்டி, டாக்டர் பெனடிக்ட் சாஸ், சேவியர் சொலினிக் ஆகியோர் அடங்கிய குழு தமிழகம் வந்துள்ளது. இக்குழு இன்று (7.11.12) தலைமைச்செயலகத்தில் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு V.மூர்த்தி அவர்களை சந்தித்து ஆவின் நிறுவனத்திற்கு பால் உப பொருட்கள் மற்றும் சாக்லெட் தயாரிக்க உதவும் வகையில் உயரிய தொழில் நுட்பம் அளிப்பது மற்றும் ஆவின் நிறுவனத்துடன் கூட்டு முயற்ச்சியில் புதிய பால் உப பொருட்கள், சாக்லெட் தயாரித்து விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி கலந்துரையாடினார்கள்.

இந்த சந்திப்பின்போது கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பால்வளத் துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு தா.கி.ராமச்சந்திரன், சென்னை கால்நடை மருத்துவக்கல்லூாி துணை வேந்தர் திரு ஆர்.பிரபாகரன் ஆவின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன், பொது மேலாளர் (பணிக்குழு) திரு பி.குமாராவேல் பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**